**தூத்துக்குடி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

மூ.மு.எண். 1058/அ1/2022, நாள் .02.2022

பொருள் : **தமிழ்நாடு அமைச்சுப்பணி** : - பள்ளிக்கல்வித் துறை - திருச்செந்தூர் கல்வி மாவட்டம் - திருச்செந்தூர், அருள்மிகு செந்திலாண்டவர் அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளி - இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெற்ற திரு.ஆ-ஆறுமுகம் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பு.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண் 101 பள்ளிக்கல்வி (வரவு செலவு 1)த் துறை நாள். 18.05.2018
2. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதம் ந.க.எண்.3406/PSD/I2/2019, நாள்.15.02.2020.
3. தூத்துக்குடி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1970/அ1/2020, நாள்.17.09.2020.
4. திருச்செந்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண் 5769 / அ1 / 2022, நாள் 07.02.2022

---

திருச்செந்தூர் கல்வி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு செந்திலாண்டவர் அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ஆ.ஆறுமுகம் என்பார் பார்வை 2 மற்றும் 3 ல் காணும் கடிதப்படி, 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV மூலம் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்று 21.09.2020 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். அன்னார் இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாளான 21.09.2020 முற்பகல் முதல் கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

1. சம்மந்தப்பட்ட பணியாளர் வரன்முறை செய்த நாளிலிருந்து மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு தகுதி காண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும்
2. பவானிசாகர் அடிப்படை பயிற்சி தேர்ச்சி பெற்ற பின்பே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
3. உரிய காலத்தில் மாவட்ட அலுவலக நடைமுறையில் தேர்ச்சி பெறப்பட வேண்டும்.
4. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு உரிய அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

21/2/22

முதன்மைக் கல்வி அலுவலர்

தூத்துக்குடி

25/2/22

**இணைப்பு** - பணிப்பதிவேடு அசல்

பெறுநர் -

மாவட்டக் கல்வி அலுவலர், திருச்செந்தூர்

நகல்- திரு.ஆ.ஆறுமுகம், இளநிலை உதவியாளர்,

அருள்மிகு செந்திலாண்டவர் அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளி. திருச்செந்தூர்

(தலைமை ஆசிரியர் மூலமாக)